**மத்திய கலாச்சார நிதியம் - 2016**

-----------------------------------------------------

மத்திய கலாச்சார நிதியத்தின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றுகைக் கூற்று, உரிமை மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கத் தகவல்களின் பொழிப்பினை உள்ளடக்கிய 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு 1980 இன் 57 ஆம் இலக்க மத்திய கலாச்சார நிதியச் சட்டத்தின் 9(2) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. மத்திய கலாசார நிதியச் சட்டத்தின் 9(4) ஆம் பிரிவின் பிரகாரம் நிதியத்தின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

**1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு**

-----------------------------------------------------------------------------

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

**1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு**

------------------------------------------

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ISSAI 1000-1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந் நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக் கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிதியத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நிதியத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் விளைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் மற்றும் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.4 முனைப்பழிப்புள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

-------------------------------------------------------------------

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 முனைப்பழிப்புள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்கள் நிதிக்கூற்றுக்களில் ஏற்படுத்தும் தாக்கங்களைத் தவிர, நிதிக்கூற்றுக்களானவை மத்திய கலாச்சார நிதியத்தின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 02

மீளாய்வாண்டின் போது முதலீடு செய்யப்பட்டிருந்த ரூபா 1,600 மில்லியன் தொகை மற்றும் முதலீடுகளை திருப்பி எடுத்தல் ரூபா 100 மில்லியன் தொகை முறையே காசு வெளிப்பாய்ச்சல் மற்றும் காசு உள்பாய்ச்சல் என காசுப்பாய்ச்சல்கூற்றில் வெவ்வேறாக காட்டப்பட்டிருந்தது. மேலும், ஆண்டின் போது மூலதனப்படுத்தப்பட்ட முதலீட்டு வட்டி ரூபா 124 மில்லியன் தொகை காசு வெளிப்பாய்ச்சல் என காட்டப்பட்டிருந்தது.

(ஆ) இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 07

நடைமுறை அல்லாத சொத்துக்களின் ஆக்கபூர்வமான வாழ்க்கைக் காலத்தை வருடாந்தம் மீளாய்வு செய்யாமையால் ரூபா 191.4 மில்லியன் கிரயத்தையுடைய நிலையான சொத்துக்களுக்காக முற்றாக பெறுமானத் தேய்வு கழிக்கப்பட்டிருந்த போதிலும் தொடர்ந்தும் பயன்படுத்தப்பட்டுக் காணப்பட்டது. அதன் பிரகாரம், ஏற்பட்டிருந்த மதிப்பீட்டு தவறினை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 3 இன் பிரகாரம் மாற்றியமைப்பதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. மேலும், அகற்றுவதற்கென காணப்பட்ட சொத்துக்கள் தொடர்பாக நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

#### 2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ஐயக்கடன் ஒதுக்கம் தொர்பாக நிதியத்தினால் கடைபிடிக்கப்பட்டு வரும் கணக்கீட்டு கொள்கை நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தியிருக்காததுடன் 05 வருடத்திற்கு மிகையான காலம் முதல் அறவிடப்படாத ரூபா 1,587,362 இற்கான கடன்பட்டோர் மீதிகள் காணப்பட்ட போதிலும் அது தொடர்பாக மீளாய்வு செய்யப்படாமல் எல்லா வருடங்களிலும் ரூபா 1,964,833 தொகை ஐயக்கடன் என ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஆ) நிதியத்தினால் தொள்பொருளியல் இடங்களைப் பார்வையிடுவோர்களுக்காக வழங்குவதற்காக அச்சிடப்பட்டிருந்த அனுமதிப்பத்திரங்களில் மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு ரூபா 3,424,990 தொகைக்கான அனுமதிப்பத்திர இருப்பினை நிதிக்கூற்றுக்களின் உட்படுத்தியிருக்காமையால் அனுமதிப்பத்திரங்களின் இறுதி இருப்பு மீதி மற்றும் ஆண்டிற்காக இலாபம் அதே தொகையால் குறைவாகக் காட்டப்பட்டிருந்தது.

(இ) இருப்பு கணிப்பீட்டு அறிக்கையின் பிரகாரம், 08 செயற்திட்டங்கள் தொடர்பாக காணப்பட்ட சொரூபங்கள், கட்டிடப் பொருட்கள், காகிதாகிகள் மற்றும் வெளியீடுகளின் பெறுமதி ரூபா 13,179,037 தொகை 2016 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு இறுதியிருப்பில் உள்ளடங்கியிருக்காமையால் மீளாய்வாண்டிற்கான இறுதியிருப்புக்கள் மற்றும் ஆண்டிற்கான இலாபம் அதே தொகையினால் குறைவாகவும் காட்டப்பட்டிருந்தது.

(ஈ) ஆண்டின் போது பல்வேறு தரப்பினருக்கு வெகுமதியாக வழங்கியிருந்த ரூபா 1,415,122 தொகை பெறுமதியான சொரூபங்கள் மற்றும் வெளியீடுகள் இருப்புக் கணக்கிற்கு செலவு வைப்பதற்கு பதிலாக விற்பனவுக் கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டிருந்தாமையால் ஆண்டிற்கான விற்பனவுகள் அதே தொகையால் மிகையாகவும் ஆண்டிற்கான சொரூபங்களின் இருப்பின் பெறுமதி ரூபா 1,286,258 இனால் மற்றும் வெளியீடுகளின் இருப்பு ரூபா 128,864 தொகை மிகையாகவும் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது.

(உ) 2016 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறு இருப்பு கணிப்பீடு அறிக்கையின் பிரகாரம் ஜேதவன செயற்திட்டம் தொடர்பாக ரூபா 1,944,837 தொகை பெறுமதியான மிகை இருப்பு தொகையொன்று அறிவிக்கப்பட்டிருந்ததுடன் அதற்கான காரணங்களை தேடி நிதிக்கூற்றுக்களில் சீராக்கல்கள் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஊ) நிதியத்தின் நடைமுறைக் கணக்கு ஒன்று தொடர்பாக 2016 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு வங்கி இணக்கக் கூற்றில் 2016 ஜூன் முதல் காணப்படும் ரூபா 10,000 இற்கான இனங்காணப்படாத செலவு மீதியொன்று காட்டப்பட்டிருந்ததுடன் அம்மீதி 2017 அக்தோபர் அளவிலும் இனங்கண்டு நிதிக்கூற்றுக்களில் சீராக்கல் மேற்கொள்வதற்கு தேவையான நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

### 2.2.3 விளக்கமளிக்காத வித்தியாசங்கள்

2 செயற்திட்டங்கள் தொடர்பாக நிரந்த தொழிலாளர்களுக்கு வழங்கியிருந்த மோட்டார் சைக்கிள்கள் கடன் மீதிக்காக தலைமையலுவலத்தினால் தயாரித்திருந்த இணக்கக் கூற்றின் பிரகாரம் மற்றும் செயற்திட்டத்தினால் அனுப்பியிருந்த அறிக்கையின் பிரகாரம் 2016 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 270,808 இற்கான இணக்கஞ் செய்யப்படாத வித்தியாசமொன்று அவதானிக்கப்பட்டது.

### 2.3 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 05 ஊழியர்களிடம் அறவிடப்பட வேண்டிய இடர்கடன் ரூபா 287,083 தொகையும், 03 ஊழியர்களிடம் அறவிடப்பட வேண்டிய வீடமைப்புக் கடன் ரூபா 766,048 தொகையும், 55 ஊழியர்களிடம் அறவிடப்பட வேண்டிய விழா முற்பணம் ரூபா 267,525 தொகையும், 11 ஊழியர்களிடம் அறவிடப்பட வேண்டிய விஷேட முற்பணம் ரூபா 28,991 தொகையுமாக 1 வருடத்திற்கும் 5 வருடங்களுக்குமிடையே கால வீச்சில் அறவீடுகள் நிலுவையாக காணப்பட்ட கடன் மீதிகளை பிணையாளர்களிடம், ஆதனங்களின் மூலம் அல்லது சட்ட செயற்பாடுகளின் மூலம் அறவீடு செய்வதற்காக இதுவரை நடவடிக்கை ஏதும் எடுத்திருக்கவில்லை. மேலும், 05 வருடங்களை விட மிகையான விழா முற்பணங்கள் ரூபா 1,049,260 தொகையும், விஷேட முற்பணங்கள் ரூபா 76,499 தொகை அறவீடு செய்யப்படாமல் காணப்பட்டதுடன் அக்கடன் மீதிகளும் ஒரு வருடத்தில் அறவிடப்பட வேண்டிக் காணப்பட்ட போதிலும் அவ்வாறு செய்யாமைக்கான காரணம் விளக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) பலவின கடன்பட்டோர் மீதியில் கலாச்சார அலுவல்கள் அமைச்சில் இருந்து 4 வருடங்களை விட மிகையான காலம் முதல் அறவிடப்பட வேண்டிய ரூபா 672,577 இற்கான மீதியொன்று காணப்பட்டது.

(இ) நடைமுறை அல்லாத பொறுப்புக்களின் கீழ் காட்டப்பட்டுள்ள விஷேட நிதியம் மற்றும் வெளிநாட்டு நிதியம் செயற்திட்டங்கள் தொடர்பாக முறையே ரூபா 8,806,885 உம் மற்றும் ரூபா 4,376,549 இற்கான மீதிகள் 2012 ஆண்டிற்கு முன்னர் இருந்து காணப்பட்ட போதிலும் மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதி வரையும் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

## 2.4 சட்டங்கள் விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணக்கமின்மைகள்

பின்வரும் இணக்கமின்மைகள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள்,விதிகள்,பிரமாணங்களுடன் தொடர்பு | இணக்கமின்மைகள் |
|---|---|
| (அ) 1980 இன் 57 ஆம் இலக்க மத்திய கலாச்சார நிதியச் சட்டம் | |
| i. 4 (இ) ஆம் பிரிவு | நிதிக்கூற்றுக்களின் ஏனைய கலாச்சார செயற்பாடுகளின் கீழ் காட்டப்பட்டிருந்த ரூபா 79,074,872 தொகை பன்சலைகள், பெரஹராக்கள், விஹாரைகள் மற்றும் மத விழாக்களுக்காக வழங்கியிருந்த போதிலும் இந்த நன்கொடைகள் தொடர்பாக மேற்கூறிய பிரிவின் பிரகாரம் நிருவாகசபையின் அங்கீகாரம் பெற்றிருக்கவில்லை. மேலும் மேற்கூறிய பிரிவுக்கு முரணாக நிருவாக சபையின் அங்கீகாரம் இன்றி மீளாய்வாண்டின் போது பல்வேறு தரப்பினருக்கு முறையே ரூபா 1,286,258 தொகை மற்றும் ரூபா 128,864 தொகை பெறுமதியான சொரூபங்கள் மற்றும் பிரசுரங்கள் நன்கொடையாக வழங்கப்பட்டிருந்தன. |
| ii. 4(ஊ) ஆம் பிரிவு | மேற்கூறிய பிரிவின் பிரகாரம் நிதியத்திற்குச் சொந்தமாக பணத்தை முதலீடு செய்வற்காக நிருவாக சபையின் அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொள்ள வேண்டுமெனினும் மீளாய்வாண்டின் போது நிலையான வைப்புக்களில் முதலீடு செய்திருந்த ரூபா 1,600 மில்லியன் தொகை தொடர்பாக நிருவாக சபையின் அங்கீகாரத்தை பெற்றிருக்கவில்லை. |

| | | |
|---|---|---|
| (ஆ) | 1940 இன் 9 ஆம் இலக்க தொல்பொருள் கட்டளைச் சட்டத்தின் 21(1) ஆம் பிரிவு | மேற்கூறிய கட்டளைச் சட்டத்தின் 21(1) ஆம் பிரிவின் பிரதான தொல்பொருளியல் ஆணையாளரிடம் பெற்றிருந்த அங்கீகாரம் ஒன்று இன்றி அல்லது 20 ஆம் பிரிவின் பிரகாரம் ஏற்பட்டுத்திய உடன்படிக்கை யொன்று இன்றி அல்லது தொல்பொருளியல் பாதுகாப்பு நினைவு சின்னங்களில் எதுவித திருத்த வேலை ஒன்று, புனர்நிர்மாணம் ஒன்று, மாற்றமொன்று மேற்கொள்ளல் அல்லது மேலதிக நிர்மாண வேலையொன்று மேற்கொள்வதற்கு முடியாதெனினும், 2008 ஜூன் 06 திகதிய 1553 ஆம் இலக்கம் கொண்ட வர்த்தமானி பாதுகாக்கப்பட்ட தூபங்கள் என வெளியிடப்பட்ட சித்தம் கல்லென ரஜமஹா விகாரைக்கு சொந்தமான பூமியின் தர்ம மண்டபம் மற்றும் பழைமை வாய்ந்த தேவாலயத்தின் புனர்நிர்மாண அலுவல்களுக்காக நிதியத்தினால் ரூபா 16,258,246 தொகை செலவிடப்பட்டிருந்தது. |
| (இ) | இலங்கை சனநாயக சோசலிச குடியசரின் நிதிப்பிரமாணக் கோவை<br>------------------------------------------------------- | |
| | (i) நிதிப்பிரமாணங்கள் 102,103,104 மற்றும் 105 | ❖ 2016 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பண்டங்கள் கணிப்பீட்டு அறிக்கையின் பிரகாரம் மொனறாகலை செயற்திட்டத்திற்கு உரிய மண் வெட்டிகள், பெருஞ் சுத்தியல்கள் போன்ற உபகரணங்கள் மற்றும் தேவையான 09 வகையைச் சேர்ந்த 19 விடயங்களும் பட்டலீய சொரூபங்கள் தயாரிக்கும் பாடசாலைக்கு சொந்தமான 3132 சதுர அடி பித்தளைத் தகரம் இருப்பொன்றிற்கான பற்றாக்குறை தொடர்பாக நிதிப்பிரமாணங்களின் பிரகாரம் விசாரனை மேற்கொள்ளப்பட்டு பொறுப்புச் சொல்ல வேண்டியவர்களை இனங்காணல் 2017 நவம்பர் 30 திகதி வரை மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை.<br><br>❖ தம்புள்ள வெளியீடுகள் களஞ்சியத்தில் ரூபா 499,368 தொகை பெறுமதியான வெளியீடுகள் தொக்கு ஒன்று பற்றாக்குறை ஒன்று ஏற்பட்டு 5 வருடங்களை விட மிகையான காலமொன்று கழிந்திருந்த போதும் அது தொடர்பாக நிதிப்பிரமாணங்களின் பிரகாரம் பொறுப்பு சொல்ல வேண்டியவர்களை இனங்காண்வதற்கு மற்றும் தொடர்புடைய நபர்களிடம் நட்டத்தை அறவீடு செய்தல் மற்றும் ஒழுக்காற்று நடவடிக்கைகள் எடுத்தல் |

| | | |
|---|---|---|
| | | ஆகிய விடயங்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (ii) | நிதிப்பிரமாணம் 381(1) | நாடு பூராகவும் அமைந்துள்ள பிராந்திய அலுவலகங்களுக்காக திறைசேரியின் அங்கீகாரம் இன்றி 25 வங்கி நடைமுறைக் கணக்குகள் ஆரம்பிக்கப்பட்டிருந்தன. |
| (ஈ) | 1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கை | நிலையான சொத்துக்களை வெவ்வேறாக இனங் காணக்கூடிய விதமாக ஒவ்வொரு சொத்துக்களின் தொகுதிகளின் கீழும் காணப்படும் சொத்துக்களை அடையாளமிடப்படல் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. இதன் காரணமாக, நிதியத்திற்கு சொந்தமான தலைமை அலுவலகம் மற்றும் பிராந்திய அலுவலகங்களில் காணப்பட்ட ரூபா 1,155,763,937 தொகை பெறுமதியுடைய சொத்துக்களை பௌதீக ரீதியாக உளமையை மெய்ப்பிப்பதற்கு இயலாத நிலைமை ஒன்று காணப்பட்டது. |
| (உ) | 2002 நவம்பர் 28 திகதிய ஐஏஐ/2002/02 இலக்க திறைசேறி சுற்றறிக்கை | தலைமை அலுவலகத்தில் மற்றும் பிராந்திய அலுவலங்களில் காணப்பட்ட ரூபா 56,002,545 தொகை பெறுமதியான கணனிகள் மற்றும் மென்பொருட்கள் தொடர்பாக நிலையாக சொத்துக்கள் பதிவேடு ஒன்று பேணப்பட்டிருக்கவில்லை. |
| (ஊ) | 2015 ஜுலை 10 ஆம் திகதிய 02/2015 ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கை | அபயகிரி செயற்திட்டத்தில் நிறுத்தி வைக்கப்பட்டு காணப்பட்ட பயன்படுத்த முடியாத 04 டிரக்டர்கள், 02 மோட்டார் சைக்கிள்கள், ஒரு முச்சர வண்டி மற்றும் ஒரு நீர் பவுசர் என்பன தொடர்பான மேற்கூறிய சுற்றறிக்கையின் பிரகாரம் அகற்றுதல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |

## 3 நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டிற்கான நிதி விளைவுகள் ரூபா 1,696,834,303 இற்கான மிகையொன்றினை காட்டியதுடன் அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மிகை ரூபா 867,115,250 ஆக இருந்தது. அதன் பிரகாரம் முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக நிதி விளைவுகள் ரூபா 829,719,053 இனால் அதாவது 95.6 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்திருந்தது. முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டில் நுழைவுச் சீட்டு விற்பனவு வருமானம் ரூபா 694,863,531 இனால், வெளியீடுகள் விற்பனவு வருமானம் ரூபா 6,915,018 இனால், முதலீட்டு வருமானம் ரூபா 138,856,955 இனால் ஏனைய வருமானங்கள் ரூபா 10,103,771 இனால் மற்றும் பிற்போடப்பட்ட வருமானம் ரூபா 27,097,930 இனால் அதிகரித்திருத்தல் மேற்கூறிய வளர்ச்சிக்கு முக்கிய காரணமாக இருந்துள்ளது.

மீளாய்வாண்டினதும் முன்னைய 04 ஆண்டுகளினதும் நிதிவிளைவுகளை பகுப்பாய்வு செய்த போது 2012 ஆண்டின் போது ரூபா 227,294,733 தொகைக்கான மிகை இடையறாமல் வளர்ச்சியடைந்திருந்தது. ஊழியர் வேதனம் மற்றும் நடைமுறையல்லாத

சொத்துக்களுக்கான பெறுமானத் தேய்வினை கவனத்தில் கொள்ளப்பட்ட பின்னர் 2012 ஆண்டின் போது ரூபா 891,233,340 தொகையால் காணப்பட்ட பங்களிப்பு இடையறாது வளர்ச்சியடைந்து 2016 ஆண்டின் போது ரூபா 3,034,217,986 தொகையாகியிருந்தது.

## 4 செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றுகை

1980 இன் 57 ஆம் இலக்க மத்திய கலாச்சார நிதியச் சட்டத்தின் பிரகாரம் கலாச்சார முக்கோணத்தில் காணப்படும் கலாச்சார தூபிகள் மற்றும் வேறு ஒரு பிரதேசத்தில் காணப்படும் கலாச்சார தூபிகளை அபிவிருத்தி செய்தல், ஜேதவன தாகபை திட்டத்தில் மற்றும் வேறு திட்டங்களின் அனைத்து செலவுகளையும் தீர்த்தல். இலங்கையில் அல்லது அதற்கு வெளியே மத விடயங்களை மேம்படுத்தல், மதத்தை உயர்வடையச் செய்தல் அல்லது மதம் சார்ந்த இடங்களை பேணல், கலாச்சார மற்றும் மதம் சார் பரப்புகளில் சேவையாற்றியுள்ள நபர்களுக்கு மானியங்களை வழங்குதல், கலை விடயங்களுக்காக உதவிகள் வழங்குதல் மற்றும் பொதுமக்களுக்கு நலன்களை வழங்கும் ஏனைய மதம்சார் அல்லது கலாச்சார விடயங்களுக்காக நிதியங்களை ஈடுபடுத்தல் என்பன பிரதான குறிக்கோள்களாகும். இந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சுற்றுலா சபை இணையத்தளத்தில் இருந்து பெற்றுக்கொண்ட தகவல்களின் பிரகாரம் 2013 ஆண்டு முதல் 2016 ஆண்டு வரை இலங்கைக்கு வந்துள்ள உல்லாசப் பிரயாணிகளின் எண்ணிக்கை மற்றும் நிதியத்தின் ஏடுகளின் பிரகாரம், நிதியத்தினால் விற்பனை செய்திருந்த உல்லாசப் பிரயாணிகள் நுழைவுச் சீட்டுக்களின் எண்ணிக்கையின் இடையே ஆன பகுப்பாய்வு ஒன்று கீழே தரப்பட்டுள்ளது.

| ஆண்டு | இலங்கை வந்துள்ள உல்லாச பிரயாணிகளின் எண்ணிக்கை | நிதியத்தினால் விற்பனவு செய்திருந்த உல்லாசப் பிரயாணிகளுக்கான நுழைவுச் சீட்டுக்களின் எண்ணிக்கை | விற்பனை செய்திருந்த நுழைவுச் சீட்டுக்களின் எண்ணிக்கை உல்லாசப் பிரயாணி களுக்கு ஒப்பாக சதவீதமொன்றாக | நுழைவுச் சீட்டு வருமானம் |
|---|---|---|---|---|
| | | | | ரூபா |
| 2013 | 1,274,593 | 504,699* | 39* | 1,748,439,894 |
| 2014 | 1,527,153 | 627,136* | 41 | 2,200,143,813 |
| 2015 | 1,798,380 | 722,676* | 40 | 2,751,061,677 |
| 2016 | 2,050,832 | 903,755* | 45 | 3,445,925,208 |

(* ஒரு உல்லாச பிரயாணியினால் ஒரு தொல்பொருளியல் நிலையம் மாத்திரம் பார்வையிட்டதாக அனுமானித்து கணக்கிடல் மேற்கொள்ளப்பட்டது)

மேற்கூறிய தகவல்களின் பிரகாரம், 2013,2014,2015 மற்றும் 2016 ஆண்டுகளின் போது இலங்கைக்கு வந்திருந்த உல்லாசப் பிரயாணிகளின் எண்ணிக்கைக்கு ஒப்பாக நிதியத்தினால் விற்பனை செய்திருக்க நுழைவுச் சீட்டுக்களின் எண்ணிக்கை முறையே 39 சதவீதம், 41 சதவீதம், 40 சதவீதம் மற்றும் 45 சதவீதமாக காணப்பட்டது. அதன் பிரகாரம் பழமை வாய்ந்த கலாச்சார இடிபாடுகள் உடைய இடங்களை பார்வையிடல் மற்றும் மத விவகாரங்களின் மேம்பாட்டுக்காக உல்லாச பிரயாணிகளை ஈர்ப்பதற்காக விற்பனை மேம்பாட்டு நடைமுறை ஒன்றினை அமுல் நடத்துவதன் ஊடாக தொடர்ந்தும் வருமானத்தை அதிகரிக்க செய்வதற்கு இயலுமை ஒன்று காணப்படுவதாக அவதானிக்கப்பட்டது.

(ஆ) நிதியத்தினால் தயாரிக்கப்பட்டிருந்த வேலைத்திட்டத்தின் பிரகாரம், மீளாய்வாண்டின் போது நிறைவேற்றுவதற்குத் திட்டமிட்டிருந்த மதிப்பீட்டுக் கிரயம் ரூபா 92,657,086 இற்கான அகழ்தல் மற்றும் பாதுகாத்தல் செயற்திட்டங்களுக்கான 22 வேலைத்தளங்கள் மற்றும் செயற்பாடுகள் ஆண்டின் போது ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) வேலைத்திட்டத்தின் பிரகாரம் மீளாய்வாண்டின் போது நிறைவேற்றுவதற்கு திட்டமிடப்பட்டிருக்காத 03 செயற்திட்டங்களுக்கான 04 வேலைத்தளங்கள் மற்றும் செயற்பாடுகளுக்காக ரூபா 3,976,597 தொகை செலவிடப்பட்டிருந்தது.

(ஈ) 2016 ஆண்டிற்கான முன்னேற்ற அறிக்கையின் பிரகாரம் ஆண்டின் போது வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டிருந்த 51 வேலைத்தளங்கள் மற்றும் செயற்பாடுகளில் 21 இற்காக வேலைத்திட்டத்தின் பிரகாரம் மிகை மதிப்பீட்டின் மூலம் பண ஒதுக்கம் மேற்கொள்ளப்பட்டிருந்து அதில் அடங்கியிருந்த 13 வேலைத்தளங்கள் மற்றும் செயற்பாடுகளுக்காக மிகை மதிப்பீட்டின் பிரகாரம் வேலை அலகுகள் திட்டமிடப்பட்டிருந்தன.

### 4.2 முகாமைத்துவ செயற்பாடுகள்

-------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றது.

(அ) கொழும்பு தலைமை அலுவலகத்தில் அமைந்துள்ள வளவின் சட்டரீதியான உரிமையை நிதியத்திற்கு உரித்தாக்குவதற்கு 2017 அக்தோபர் 31 திகதி வரை இயலாதுள்ளது.

(ஆ) கல்வி அமைச்சின் மேற்பார்வையின் கீழ் காணப்பட்ட அபேகம நிறுவனத்தில் மேற்பார்வை விடயங்கள் மத்திய கலாச்சார நிதியத்திற்கு சாட்டுவதற்காக இருதரப்பினரினாலும் கையொப்பமிடப்பட்ட 2016 ஜூன் 16 ஆம் திகதிய ED/10/NH/03/02/01/07 இலக்கங் கொண்ட புரிந்துணர்வு உடன்படிக்கையின் 08 ஆம் பந்தியின் பிரகாரம் உடனடியாகச் செயற்படும் விதமாக அபேகம நிறுவனத்தின் அனைத்து கட்டிடங்கள் மற்றும் பண்டங்களை முறைசார் விதமாக கல்வி அமைச்சில் இருந்து ஒப்புக்கொள்வதற்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமெனினும் நிதியத்தினால் 2017 அக்தோபர் 31 திகதி வரை அவ்வாறு செய்திருக்கவில்லை.

(இ) 2014 நவம்பர் 12 திகதிய கூடிய பொது முயற்சி பாராளுமன்ற தெரிவுக்குழுவினால் எடுக்கப்பட்டிருந்த 09 ஆம் இலக்க தீர்மானத்தின் பிரகாரம் பதவியணி வெற்றிடங்களை நிரப்புவதற்காக உரிய நடவடிக்கை எடுக்குமாறும் அதற்கான திறைசேரியின் அங்கீகாரத்தை பெற்றுக்கொள்ளும் படியும் குறிப்பிடப்பட்டிருந்தது. எனினும் பணிப்பாளர் (நிதி), பணிப்பாளர்(நிருவாகம்), நுழைவுச் சீட்டு விற்பனையாளர், உதவிப் பணிப்பாளர்(நிதி), பிரதான பரிசோதனை உத்தியோகத்தர், சட்ட உத்தியோகத்தர்கள் பதவிகளுக்காக ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்படாமல் ஒப்பந்த அடிப்படையில் உத்தியோகத்தர்கள் சேர்க்கப்பட்டு சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தன.

(ஈ) மிஹிந்தலை ரஜமஹா விஹாரையின் பிக்குமார் மடம் மற்றும் தர்ம மண்டபம் நிர்மானிப்பதற்காக 2016 மே 11 ஆம் திகதி 2863 ஆம் இலக்க உறுதிச் சீட்டின் மூலம் ரூபா 15 மில்லியன் மூலம் தொல்பொருளியல் திணைக்களத்திற்கு செலுத்தியிருந்த போதிலும் கொடுப்பனவு காசேட்டில் கொடுப்பனவை பெறுபவர் அநுராதபுர மாவட்ட செயலாளர் என குறிப்பிடப்பட்டிருந்தது.

(உ) நிதியத்தினால் விற்பனவு செய்யப்பட்டிருந்த நுழைவுச் சீட்டுக்களுக்காக 2015 திசெம்பர் 09 திகதி வாடிக்கையாளர் ஒருவரிடம் கிடைத்திருந்த ரூபா 231,000 இற்கான காசோலை ஒன்று மதிப்பளிக்கப்படாதிருந்ததுடன் 2017 அக்தோபர் 30 திகதி வரை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஊ) 2014 ஆகஸ்ட் 13 திகதி ரூபா 5,000,000 தொகை ஹாதிகமுவ குருகொட விகாரையின் சமய போதனா மண்டபம் நிர்மாணிப்பதற்காக கிராம அபிவிருத்தி சங்கமொன்றிற்கு வழங்கப்பட்டிருந்தது. இந்த சமய போதனை மண்டபத்திற்கான நிர்மாண வேலைகள் 2017 அக்தோபர் 31 திகதி வரையும் பூர்த்திசெய்திருக்கவில்லை.

(எ) 2012 ஆண்டின் போது ரூபா 4.2 மில்லியன் தொகைக்கு பெறுமதி மதிப்பீடு செய்திருந்த நிதியத்தின் ஆதனம் ஒன்றாகிய கண்டியில் உள்ள பிரீம்ரோஸ் காணி 2013 ஆண்டு முதல் மகரகம சாசன ஊழியர் சங்கம் என கட்டிடம் நிர்மாணிக்கப்பட்டு பிக்குகள் பயிற்சி வழங்கும் நிலையம் என நடாத்தப்பட்டு வருகின்ற போதிலும் அந்த ஆதனங்களை நிதியத்திற்கு உரித்தாக்குவதற்காக முடியாதுள்ளது.

(ஏ) 2016 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு இருப்பு கணிப்பீட்டு அறிக்கையின் பிரகாரம் மீளாய்வாண்டின் போது அபயகிரிய செயற்திட்டத்தின் மூலம் சந்நஹிரு சாய, பொதுவில் கடற்கரை மஹா விஹாரை, சிரி சம்போதி யோகாஷிர தியான நிலையம், மஹமெவுனா தியான ஆச்சிரமத்திற்கு 2011 – 2014 காலப் பகுதியில் தற்காலிகமாக வழங்கியிருந்த 3105 G1 இரும்புக் குழாய்கள், 4150 கப்லின்ஸ் (Cufflinks) மற்றும் பண்டங்கள் எடுத்துச் செல்லும் மின் தூக்கி ஒன்று என்பவற்றை திருப்பிப் பெறுவதற்காக நிதியத்திற்கு இயலாதுள்ளது.

(ஐ) மீளாய்வாண்டு ஆரம்பத்தில் உள்ளவாறு ரூபா 19,944,705 தொகையான திரண்ட நிதியத்தில் உள்ளடங்கியுள்ள, 1983 ஆண்டு முதல் முன்கொண்டு வரப்பட்டுக் காணப்படும் ரூபா 66,390 தொகைக்கான இனங்காணப்படாத மீதி ஒன்று ஏற்படுத்துவற்கான காரணத்தை கண்டு பிடித்து அதனை தீர்ப்பதற்கு பதிலாக திரண்ட நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டிருந்தது.

### 4.3 செயற்பாட்டு தொழில்பாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சொரூபங்கள் உற்பத்தி செய்தல், வெளியீடுகள் மற்றும் அச்சிடுதல் ஆகிய பிரிவுகளில் உற்பத்தி கிரயத்தை கணிக்கும் போது மறை கிரயத்தை கவனம் செலுத்தாமையால் சொரூபங்கள் உற்பத்தியில் உற்பத்திக் கிரயம் சரியான முறையில் இனங்காணாமல் விற்பனை விலை தீர்மானிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டிற்கான தயாரிக்கப்பட்டிருந்த வேலைத் திட்டத்தில் 10 செயற்திட்டங்களில் அடங்கியுள்ள 21 செயற்பாடுகளின் மதிப்பீட்டுக் கிரயம் மற்றும் முன்னேற்ற அறிக்கைகளின் பிரகாரம் உள்ளவாறான கிரயத்தில் 20 சதவீதம் முதல் 186 சதவீத வீச்சில் முரண்கள் காணப்பட்டது.

### 4.4 சர்ச்சைக்குரிய தன்மையுள்ள கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2011 பெப்ரவரி 02 திகதிய 11/0169/555/004 இலக்கம் கொண்ட அமைச்சரவை பத்திரத்தில் பிரகாரம் நிதியத்தினால் உழைக்கப்படும் நுழைவுச் சீட்டுக் கட்டணம் வருமானத்தில் 25 சதவீதம் தொல்பொருள் விஞ்ஞான நிலையங்களை பராமரிப்பதற்காக தொல்பொருள் முகாமைத்துவ நம்பிக்கை பொறுப்பிற்கு வழங்கப்பட வேண்டும். அதன் பிரகாரம் 2016 ஆண்டின் நிதியத்தின் வருமானம் ஆகிய ரூபா 3,445,925,208 இனால் 25 சதவீதமென ரூபா 861,481,302 தொகை அந்த நம்பிக்கை பொறுப்பிற்கு வழங்கப்பட வேண்டுமெனினும் ரூபா 104,490,691 தொகை மாத்திரமே வழங்கப்பட்டிருந்தது.

(ஆ) நிதியத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவி ஒன்றாகிய உதவிப் பணிப்பாளர்(சட்டம்) பதவிக்காக ஒப்பந் அடிப்படையில் உத்தியோகத்தர் ஒருவர் சேர்க்கப்பட்டு, ஒப்பந்த காலத்தை நீடித்து 2016 ஆகஸ்ட் 01 திகதி முதல் 2017 ஜூலை 30 திகதி வரை மாதத்திற்கு ரூபா 72,916 வீதம் ரூபா 874,992 தொகை படியாக செலுத்தப்பட்டிருந்தது. நிதியத்தில் அனைத்து சட்ட விடயங்களுக்கான கடமைகளை செயற்படுத்தல் மற்றும் நீதிமன்ற விடயங்களில் நிதியத்தின் சார்பில் சட்டத்தரணி ஒருவராக நீதிமன்றத்தில் ஆஜராகுதல். இந்த பதவிக்கு சாட்டப்பட்டுள்ள கருமங்களாக இருந்தன. எனினும் 03 சந்தர்ப்பங்களில் வெளி சட்டத்தரணிகளிடம் பெற்றிருந்த சேவைக்காக நிதியத்தினால் மீளாய்வாண்டின் போது ரூபா 1,457,425 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

(இ) 2015 மே 25 திகதிய 1/2015 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கைகள் 3.3 ஆம் பிரிவின் பிரகாரம் உத்தியோகபூர்வ வாகனம் ஒன்றிற்கு உரித்துள்ள உத்தியோகத்தர் ஒருவருக்கு அந்த உத்தியோகபூர்வ வாகனத்தை பயன்படுத்துதல் அல்லது மாதாந்த ரூபா 30,000 தொகை மற்றும் பதவிக்கு உரித்தான மாதாந்த எரிபொருள் படியினை பெற்றுக்கொள்ள முடியும். 2016 அக்தோபர் 27 திகதி 1/2015(i) இலக்க பொது முயற்சிச் சுற்றறிக்கையில் 2016 நவம்பர் 01 திகதி முதல் செயற்படும் விதத்தில் அப்படியினை ரூபா 50,000 வரை அதிகரித்திருந்த போதிலும் நிதியத்தினால் பதில் கடமையாற்றும் பணிப்பாளர்(நிதி) க்கு 2016 ஜனவரி 01 திகதி முதல் ஆகஸ்ட் 31 வரை ரூபா 50,000 போக்குவரத்துப் படி வழங்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் நிதியத்தினால் 08 மாதங்களுக்கான ரூபா 160,000 இற்கான போக்குவரத்துப் படி ஒன்று பதில் கடமையாற்றும் பணிப்பாளர்(நிதி) க்கு மேலதிகமாக செலுத்தப்பட்டிருந்தது.

(ஈ) 2016 ஜூலை 06 முதல் 08 வரையான காலப்பகுதியில் கண்டிப் பிரதேசத்தில் தனியார் ஹோட்டல் ஒன்றில் நடாத்தப்பட்ட கூட்டிணைந்த திட்டம் தயாரிக்கும் செயலமர்வு ஒன்றிற்காக நிதியத்தின் நிறைவேற்று மற்றும் நிறைவேற்று அல்லாத என்ற வகையில் 86 நிரந்தர மற்றும் ஒப்பந்த அடிப்படையில் கடமையாற்றும் உத்தியோத்தர்கள் மற்றும் ஊழியர்கள் பங்குபற்றி அதற்காக ரூபா 1,430,200 இற்கான செலவு மேற்கொள்ளப்பட்டிருந்தது. குறிப்பிட்ட உத்தியோகத்தர்களுக்கு பங்குபற்றல் படியாக ரூபா 53,500 தொகை செலுத்தப்பட்டிருந்த போதிலும் அது தொடர்பாக சட்ட ஏற்பாடுகள் விளக்கப்படவில்லை. அவ்வாறான செயலமர்வுகள் மற்றும் கருத்தரங்குகள் நடத்தும் போது 2015 செப்தெம்பர் 25 ஆம் திகதிய SP/SB/07/15 இலக்கம் கொண்ட சனாதிபதி சுற்றறிக்கையில் உள்ளடங்கியுள்ள ஏற்பாடுகள் மீது கவனம் செலுத்தியிருக்கவில்லை.

**4.5 பெறுகைகள் மற்றும் ஒப்பந்த நடைமுறைகள்**

-----------------------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கெடபெருவ விகாரையில் இளைப்பாரும் மண்டபம் நிர்மாணிக்கும் ஒப்பந்த வேலை 2015 மே 21 திகதி வழங்கப்பட்டிருந்த போதிலும் 2015 ஜூலை 07 ஆம் திகதியே பணிப்பாளர் நாயகம் மற்றும் ஒப்பந்தக்காரரிடையே உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்தது. உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்ட 568 நாட்களில் வேலைகளை பூர்த்தி செய்யப்பட வேண்டியிருந்த போதிலும் 2017 ஜூன் 13 திகதியளவில் 73 சதவீதமான வேலை அளவே பூர்த்தி செய்யப்பட்டிருந்தது. வழங்கியிருந்த முற்பணத் தொகையில் 11 சதவீதம் பெறுமதி கூட்டியவரி ஆகிய ரூபா 861,871 தொகையும் அடங்கியிருந்த போதிலும் முற்பணத்தை மீண்டும் அறவீடு செய்யும் போது அத்தொகையினை அறவீடு செய்திருக்காமையால் மேற்கூறிய ஒப்பந்த வேலையின் மூலம் நிதியத்திற்கு ரூபா 861,871 இற்கான நட்டமொன்று ஏற்பட்டிருந்தது.

(ஆ) ஆலோசனையாளர்கள் தெரிவு செய்தல் மற்றும் சேவையில் ஈடுபடுத்தல் இலங்கை பெறுகைகள் வழிகாட்டல் கோவையின் 3:1 மற்றும் 3:2 பிரிவுகளின் பிரகாரம்

ஆலோசனை நிறுவனங்கள் அல்லது தனிப்பட்ட ஆலோசனையாளர்கள் தெரிவு செய்யும் போது ஆலோசனையாளர்களின் தொழில்நுட்பம் சார் மற்றும் நிதிப் பிரேரணைகளை இணக்கஞ் செய்தலை அடிப்படையாக வைத்து போட்டி அடிப்படையிலான பெறுகைகள் நடைமுறை கடைபிடிக்கவேண்டும். எனினும், அந்த பிரிவுகளுக்கு முரணாக நிதியத்தினால் தொல்பொருளியல் ஆலோசகர், கட்டடக்கலை ஆலோசகர் மற்றும் நிலச் சரிதவியல் சார் ஆலோசனை சேவை பெற்றுக்கொள்வதற்காக மீளாய்வாண்டின் போது ரூபா 2,973,692 தொகை செலவிடப்பட்டிருந்தது.

**4.6 ஏனைய அரச நிறுவனங்களுக்கு வழங்கிய நிதியத்தின் வளங்கள்**

நிதியத்திற்கு சொந்தமான ஹந்தானையில் அமைந்துள்ள ரூபா 4 மில்லியன் பெறுமதியான 02 கட்டிடங்கள் 2012 ஆண்டு முதல் கட்டிடத் திணைக்களத்தினால் பயன்படுத்தப்பட்டு வருவதுடன் அந்த கட்டிடங்களை நிதியத்திற்கு உரித்தாக்குவதற்காக முடியாதிருந்தது.

**4.7 பதவியணியினர் நிருவாகம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிதியத்தின் ஆட்சேர்ப்பு மற்றும் பதவி உயர்வு நடவடிக்கை முறையின் 4 ஆம் பந்தியின் பிரகாரம் பணிப்பாளர் நாயகம் பதவிக்காக நியமனம் வழங்கும் அதிகாரியினால் தீர்மானிக்கும் விதமாக பகிரங்க அறிவித்தல் வெளியிடுவதன் மூலம் விண்ணப்பம் அழைக்கப்பட்டு பின்னர் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை ஒன்றின் மூலம் உள்வாரி அல்லது வெளிவாரி விண்ணப்பதாரிகளிடம் இருந்து ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்பட வேண்டும். எனினும், அந்த செயற்பாடுகளை கடைபிடிக்காமல் வரிசை அமைச்சின் செயலாளரினால் 02 வருட காலப்பகுதிக்காக பணிப்பாளர் நாயக பதவிக்காக 2015 மார்ச் 19 திகதி ஒப்பந்த அடிப்படையில் உத்தியோகத்தர் ஒருவர் நியமனம் செய்யப்பட்டிருந்தார்.

(ஆ) நிதியத்தின் பணிப்பாளர்(நிதி) பதவிக்காக 2012 ஆண்டு முதல் நிரந்தர நியமனம் ஒன்று வழங்கியிருக்காததுடன் அப்பதவிக்காக 2016 ஆகஸ்ட் மாதத்தில் ஒப்பந்த அடிப்படையில் உத்தியோகத்தர் ஒருவர் நியமனம் செய்யப்பட்டு 2016 ஆகஸ்ட் 15 திகதி முதல் 2016 திசெம்பர் 31 திகதி வரை ரூபா 341,210 இற்கான சம்பளங்கள் மற்றும் படிகள் செலுத்தப்பட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) நிதியத்தின் ஆட்சேர்ப்பு மற்றும் பதவி உயர்வு நடவடிக்கை முறையின் 4.2.3.1 உப பந்தியின் பிரகாரம் பணிப்பாளர்(நிதி) பதவிக்காக வெளிவாரி அடிப்படையாகச் சேர்க்கப்படும் போது கல்வித் தகைமைகளான பல்கலைக்கழகங்கள் மானியங்கள் ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றிலிருந்து பெற்றிருந்த கணக்கீடு / நிதி முகாமைத்துவம் தொடர்பான பட்டம் ஒன்றுடன் குறிப்பிட்ட விடயம் தொடர்பாக பட்டப்பின்படிப்பு அல்லது இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனத்தின் அல்லது பட்டய முகாமைத்துவ கணக்காளர் நிறுவனத்தின் அல்லது சான்றிதழ் பெற்ற கணக்காளர்களின் நிறுவனத்தை சார்ந்த அங்கத்துவத்தை பெற்றிருக்க வேண்டுமென காட்டப்பட்டுள்ளது. எனினும், அப் பதவிக்கான ஒப்பந்த அடிப்படையில் சேர்க்கப்பட்டிருந்த உத்தியோகத்தர் கணக்கியல் டிப்லோமா மற்றும் பட்டயக் கணக்காளர் நிறுவனத்தின் இறுதி 1 பரீட்சை மாத்திரம் சித்தியடைந்த ஒருவராக இருந்தார்.

(ii) நிதியத்தின் ஆட்சேர்ப்பு மற்றும் பதவி உயர்வு நடவடிக்கை முறையின் 4.4 உப பந்தியின் பிரகாரம் பணிப்பாளர் (நிதி) பதவிக்கான பொதுவான தகைமைகள் 30 வருடத்தில் குறையாத 50 வருடங்களை மிகையாக்காது

இருக்க வேண்டுமென குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் ஒப்பந்த அடிப்படையில் சேர்க்கப்பட்ட உத்தியோகத்தர் 70 வருடங்களை மிகைத்த ஒருவராக இருந்தார்.

(இ) முகாமைத்துவ சேவை திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தினால் கலாச்சார மற்றும் கலை விவகார அமைச்சுச் செயலாளருக்கு அனுப்பிய 2011 ஜூலை 21 ஆம் திகதிய DMS/E/1/54/9/241 கொண்ட கடிதத்தின் 03 பந்தியின் பிரகாரம் எதிர்காலத்தில் ஆட்சேர்ப்பு மேற்கொள்வதற்கு முன்னர் தற்போதைய ஆட்சேர்ப்பு நடவடிக்கை முறையை திருத்த வேண்டும் என அறிவித்திருந்த போதிலும் 2017 அக்தோபர் 31 திகதி வரையும் அந்த நடவடிக்கை முறையை திருத்தியிருக்கவில்லை.

(ஈ) நிதியத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் அடங்கியிருக்காத நூதனசாலைப் பணிப்பாளர் பதவிக்காக அரசாங்க சேவையில் இருந்து ஓய்வு பெற்றிருந்த உத்தியோகத்தர் ஒருவர் 2015 மே 05 திகதி ஒப்பந்த அடிப்படையில் ஒரு வருட காலத்திற்கு நியமனம் செய்யப்பட்டு வருடாந்தம் ஒப்பந்த காலம் நீடிக்கப்பட்டிருந்தது. அவ் உத்தியோகத்தருக்கு மாதாந்தம் ரூபா 38,500 வீதம் 2016 ஆண்டின் போது ரூபா 462,000 செலுத்தப்பட்டிருந்தது.

(உ) நிதியத்தின் ஆட்சேர்ப்பு மற்றும் பதவி உயர்வு நடவடிக்கை முறையின் 4.6.2 உப பந்தியின் பிரகாரம் நிருவாக உத்தியோகத்தர் பதவிக்கு உள்ளக அடிப்படையில் சேர்க்கும் போது சேவை அனுபவம், கல்வித் தகைமைகள், விஷேட செயற்பாடுகள் மற்றும் செயலாற்றுகை என்பனவற்றினை அடிப்படையாக வைத்து புள்ளிகள் வழங்கல் மேற்கொள்ளப்பட வேண்டும். அங்கு விண்ணப்பதாரர்களுக்கான கல்வித் தகைமைகள் என்ற தேர்வு முறையின் கீழ் க.பொ.த(உயர்தர) பரீட்சை அல்லது அதனை விடக்கூடிய கல்வித் தகைமைகள் காணப்பட வேண்டுமென குறிப்பிட்டிருந்த போதிலும் கா.பொ.த(சாதாரண தர) பரீட்சை சித்தியடைந்த மற்றும் குறைந்த சேவை அனுபவத்தை கொண்ட நபர் ஒருவருக்கு கூடிய புள்ளிகள் வழங்கப்பட்டு நிருவாக உத்தியோகத்தர் பதவிக்காக 2016 ஜனவரி 01 திகதி பதவி உயர்வு வழங்கப்பட்டிருந்தது.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 செயல் நடவடிக்கை திட்டம்

2014 பெப்ரவரி 17 திகதிய 01/2014 ஆம் இலக்கம் பொது நிதியச் சுற்றறிக்கையின் 04 ஆம் பந்தியின் பிரகாரம் நீண்ட கால தூரநோக்குகளுடன் குறிப்பிட்ட சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள குறிக்கோளை நிறைவேற்றி கொள்வதனை இலக்காகக் கொண்ட செயற்பாடுகளை உள்ளடக்கிய வருடாந்த செயல் நடவடிக்கை திட்டம் ஒன்று தயாரிக்கப்பட வேண்டும். எவ்வாறாயினும், நிதியத்தினால் மீளாய்வாண்டிற்காக செயல் நடவடிக்கைத் திட்டமொன்று தயாரித்திருக்காததுடன் அகழ்தல் மற்றும் பாதுகாத்தல் செயற்திட்டங்களுக்காக மாத்திரம் வேலைத்திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருந்தது.

### 5.2 பெறுகைகள் திட்டம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2016 ஆண்டிற்கான தயாரிக்கப்பட்டிருந்த பெறுகைகள் திட்டத்திற்காக வருடம் தொடங்குவதற்கு முன்னர் பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் பெறப்பட வேண்டுமெனினும் 2016 நவம்பர் 25 திகதியே அங்கீகாரம் பெறப்பட்டிருந்தது.

(ஆ) பெறுகைகள் திட்டத்தில் உள்ளடங்கியிருக்காத ரூபா 16,328,430 கிரயத்தையுடைய வாகனங்கள் மற்றும் ரூபா 2,970,200 தொகைக்கான கணனிகள் மற்றும் துணைக்கருவிகள் மீளாய்வாண்டின் போது கொள்வனவு செய்யப்பட்டிருந்தது.

(இ) ஆலோசகர்கள் தெரிவு செய்தல் மற்றும் சேவையில் ஈடுபடுத்தல் பெறுகைகள் வழிகாட்டல் கோவையில் 5.2.1(அ) ஆம் பிரிவின் பிரகாரம் பாதுகாப்பு ஆலோசனை சேவைகள் பெற்றுக் கொள்வதற்காக கட்டணங்கள் செலுத்தல் தொடர்பான தகவல்கள் நிதியத்தின் பெறுகைகள் திட்டத்தில் உட்படுத்தியிருக்கவில்லை.

(ஈ) மீளாய்வாண்டிற்காக நிதியத்திற்காக தயாரிக்கப்பட்டிருந்த பெறுகைகள் திட்டத்தில் பிராந்திய அலுவலகங்களுக்கான பெறுகைகள் பெற்றுக்கொள்ளும் பண்டங்கள், வேலைகள் மற்றும் சேவைகள் உள்ளடங்கியிருக்கவில்லை.

**5.3 பாதீட்டுக் கட்டுப்பாடு**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2003 ஜூன் 02 ஆம் திகதிய பீஈடி/12 இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 5.2.5 பிரிவின் பிரகாரம் நிதி ஆண்டு தொடங்குவதற்கு 15 நாட்களுக்கு முன்னர் அந்த நிதியாண்டிற்கான பாதீடு, நிருவாக சபையினால் அங்கீகரிக்கப்பட்டு அதனது பிரதி ஒன்று கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அனுப்பப்பட வேண்டுமெனினும், 2016 ஆண்டிற்கான பாதீடு நிருவாக சபையினால் 2016 நவம்பர் 25 ஆம் திகதியே அங்கீகரிக்கப்பட்டிருந்தது.

(ii) அந்தப் பாதீட்டில் பாதீட்டு மற்றும் உள்ளவாறான வருமானங்கள் மற்றும் செலவுகள் 21 சதவீதம் முதல் 203 சதவீதம் வரையான வீச்சில் முரண்கள் அவதானிக்கப்பட்டமையானது பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவ கட்டுப்பாட்டுக் கருவி ஒன்றாகப் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது.

**5.4 வருடாந்த அறிக்கை சபையில் சமர்பித்தல்**

2003 ஜூன் 02 திகதிய PED/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.3 ஆம் பிரிவின் பிரகாரம் 2013, 2014 மற்றும் 2015 ஆண்டுகளுக்கான வருடாந்த அறிக்கைகள் 2017 அக்தோபர் 30 திகதி வரை பாராளுமன்றத்தில் சமர்பித்திருக்கவில்லை.

**5.5 தீர்க்கப்படாத கணக்காய்வு பந்திகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு பந்தியுடன் தொடர்பு மற்றும் ஆண்டு | அவதானிப்புகள் |
|---|---|
| (அ) 2012 – 4.5 அ, ஆ, இ | பொலன்னுறுவை புனித பூமியில் உள்ளக நுழை பாதையில் 1 கிலோமீற்றர் அபிவிருத்தி செய்யும் வேலைக்காக உரிய நியமத்தின் படி அல்லாத கொங்கிரீட் அச்சுக் கற்கள் பயன்படுத்தி ரூபா 22,099,917 தொகை செலுத்தியிருந்தல், அளவை பத்திரத்தின் பிரகாரம் நிறைவேற்றப்படாத வேலைகளுக்காக ரூபா 4,660,998 தொகை செலுத்தியிருத்தல் மற்றும் A.B.C அடுக்கு 40 சதவீதம் மற்றும் கற்தூள் கலவை 50 வீதம் குறைவாக பயன்படுத்தியிருந்தமையால் பாதை சமமான தன்மையாக காணப்படாமை ஆகிய குறைபாடுகள் தொடர்பாக 2017 நவம்பர் 30 திகதி வரை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |

(ஆ) 2013 – 4.4(அ)(ii)

பொலன்னறுவை புனித பூமியில் வெளிச் செல்லும் வாயிலில் இருந்து உட்பகுதியை நோக்கிச் செல்லும் பாதையின் 01 கிலோமீற்றர் தூரத்திற்கு கொங்கிரீட் அச்சுக் கற்கள் பரப்பி அபிவிருத்தி செய்யும் ஒப்பந்த வேலை வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் மேற்கொண்ட போது உரிய நியமத்தின் படி அல்லாத கொங்கிரீட் அச்சுக் கற்கள் பயன்படுத்தப்பட்டிருந்த போதிலும் அது தொடர்பாக தரப் பரிசோதனைகள் மேற்கொள்வதற்கு முன்னர் பகுதி கொடுப்பனவாக ரூபா 16,992,545 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

(இ) 2015 – 4.8(அ)

பட்டலிய சொரூபங்கள் தயாரிக்கும் பாடசாலையின் நிருவாகக் கட்டிடம் நிர்மாணிக்கும் ஒப்பந்த வேலை தனியார் கம்பனி ஒன்றிற்கு 2014 செப்தெம்பர் 11 திகதி ரூபா 46.4 மில்லியன் தொகைக்கு வழங்கப்பட்டிருந்தது. 2015 மே 11 ஆம் திகதி ஒப்பந்த வேலை பூர்த்தி செய்யப்பட வேண்டியிருந்த போதிலும் 2017 அக்தோபர் 31 திகதி வரை நிர்மாண வேலைகளை பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஈ) 2015 – 4.4(அ)(iii)

ஊழியர் காப்புறுதி மேவகையை பெற்றுக் கொள்வதற்காக தனியார் காப்புறுதி கம்பனி ஒன்றுடன் பிழையான பெயர் பட்டியல் ஒன்று சமர்பித்து 50 ஊழியர்களின் பெயரகளை மிகையாக உட்படுத்தி அதற்காக ரூபா 475,000 செலுத்தியிருந்ததுடன் குறிப்பிட்ட போலி ஆவணங்களைத் தயாரித்த உத்தியோகத்தர்களிடம் அப்பணத்தை அறவீடு செய்வதற்காக 2017 அக்தோபர் 31 திகதி வரையும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

## 6. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் அவ்வப்போது நிதியத்தின் பணிப்பாளர் நாயகத்தின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டது. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புகள் தொடர்பாக விஷேட கவனம் செலுத்தப்பட வேண்டும்.

| முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பரப்புகள் | | அவதானிப்புக்கள் |
|---|---|---|
| (அ) | கணக்கீடு | சொரூபங்கள், வெளியீடுகள் மற்றும் அச்சு ஆகிய பிரிவுகளின் உற்பத்திக் கணக்கு தயாரித்து சரியான முறையில் உற்பத்தி கிரயத்தை இனங்கண்டிருக்காமை. |
| (ஆ) | பதவியணியின் நிருவாகம் | (i) வெற்றிடங்களை நிரப்புவதற்காக நடவடிக்கை எடுக்காமை மற்றும் நீண்ட காலம் முதல் சில பதவிகளுக்காக ஒப்பந்த அடிப்படையில் உத்தியோகத்தர்களின் சேவையில் ஈடுபடுத்தல். |

| | | | |
|---|---|---|---|
| | | (ii) | ஆட்சேர்ப்பு நடவடிக்கை முறையை திருத்தி அமைக்காமை. |
| (இ) | பெறுகைகள் | (i) | தயாரிக்கப்பட்டிருந்த பெறுகைத் திட்டத்திற்காக நிருவாக சபையின் அங்கீகாரத்தை பெறுவதற்கு தாமதித்தல். |
| | | (ii) | பெறுகைகள் திட்டம், பாதீடு மற்றும் உடன் நிகழ்வாக தயாரித்திருக்காமை. |
| (ஈ) | பாதீட்டுக் கட்டுப்பாடு | (i) | பாதீட்டுக்காக நிருவாக சபையின் அங்கீகாரத்தை பெறுவதற்கு தாமதித்தல் மற்றும் கணிசமான அளவு முரண்கள் காணப்பட்டமை. |
| (உ) | கடன்பட்டோர் கட்டுப்பாடு | (i) | நீண்ட காலமாக காணப்படும் கடன் மீதிகளை அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுக்காமை. |
| | | (ii) | ஐயக் கடன் ஒதுக்கத்திற்காக கணக்கீட்டு கொள்கை ஒன்று காணப்படாமை. |
| (ஊ) | இருப்புக் கட்டுப்பாடு | (i) | இருப்புக் கணிப்பீட்டு அறிக்கை மற்றும் நிதிக்கூற்றுக்களிடையே வித்தியாசங்கள் காணப்பட்டமை. |
| | | (ii) | நுழைவுச் சீட்டு இருப்புக்கள் தொடர்பாக நிதிக்கூற்றுக்களில் தெளிவாக காட்டப்பட்டிருக்காமை. |